# தளபதிக்கோர் திறந்த மடல்!

மாண்புமிகு தளபதி அவர்களே,
வணக்கம்.
எவரும் எந்ததந்தைக்கும் செய்யாத காரியத்தை செய்துவிட்டு,
புகழின் உச்சியிலும் வியப்பிலும் நின்று காட்சி தருகிறீர்கள்!
தலைவர் கலைஞர் அவர்கள் உங்களுக்குமட்டும்
தந்தையல்ல, தமிழகத்திற்கே தந்தையாக;
தலைவராக விளங்கியவர்!
அவர் ஆற்றிய பணிகளெல்லாம்
வரலாற்று வடிவங்களாக காட்சியளிக்கிறது!
அவரது எழுத்து நடை ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கியது!
அவரது பேச்சு புயலாகவும் அடித்திருக்கிறது;
தென்றலாகவும் வீசியிருக்கிறது!
ஒண்பான் சுவையும் ஒருங்கே வந்து பேசியிருக்கிறது!
ஊரே வியந்திருக்கிறது!
ஐம்பது ஆண்டு காலம் தமிழ்நாடு அவரின்
ஆற்றலுக்கும் ஆளுமைக்கும் ஆட்பட்டு இருந்தது!
அது ஒரு பொற்காலம்!
அந்த பொற்காலத்தை படைத்தவருக்கு
நீங்கள் புகழ் கோட்டத்தை அமைத்திருக்கிறீர்கள்!
கோட்டம்” என்று ஒரு வார்த்தையில் சொல்லிவிட முடியாது!
எந்த முடி மன்னர்களின் நினைவிடத்திலும்
இப்படி ஓர் நினைவாலயம் கிடையாது!
எந்த மக்கள் தலைவர்களுக்கும்
இப்படி ஓர் அதிசய அரங்கு கிடையாது!
இப்படி ஓர் அதிசயத்தை யோசித்து பார்க்கிறேன்
இந்த இடத்தில் நீங்கள்கலைஞரை விஞ்சி நிற்கிறீர்கள்!
கலைஞர் கோட்டைக்கு போகிறபோதும் வருகிறபோதும்
அண்ணா நினைவிடத்தை கடக்கிற போது
அந்த இடத்தைத் திரும்பி பார்க்காமல் வரமாட்டார்!
ஒரு நாளைக்கு நூறுதரமாகிலும்
அண்ணா. .அண்ணா. . .”என்று சொல்லாமல் இருக்கமாட்டார்!
அந்த தலைவருக்கு கலைஞர் எழுப்பிய நினைவாலயத்திற்கு பக்கத்திலேயே கலைஞர் படுத்துக் கொண்டிருக்கிறார்!
வாழ்நாள் முழுவதும் போராடியே வென்ற தலைவர் கலைஞர்
அமைதி காணவேண்டிய இந்த
இடத்தைக் கூட போராடித்தான் பெற்றார்!
இனி போதும் போராட்டம் என்று படுத்து விட்டார்!
போராட்டங்களைஅவர் விட்டஇடத்திலிருந்து





நீங்கள் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்!
கலைஞரின் நினைவாலயத்தை நினைவுள்ளவர்கள்
எல்லாம் நினைத்துக் கொண்டே இருப்பார்கள்!
தாங்கள் எழுப்பியுள்ள ஆலயமானது
அலங்கார கோபுரம்எழில்சொட்டும் மாளிகை!
எந்த இடத்தை பார்த்தாலும் ஒருபுதுமை!
எப்படி இவ்வாறு அமைத்தார்கள்” என்று
கண்டோர் யாவரும் மலைத்து நின்றார்கள்!
அவ்வளவு ஏன், அந்த இடம்
கலைஞர் துயில் கொள்வதுபோல் தெரிந்தது!
உயிரோடு மேடையில் பேசுகிறார்!
உட்கார்ந்தால் நம்மிடம் விவாதிக்கிறார்!
கல்லக்குடி காட்சி நம்முன் உயிரோட்டமாகவே தெரிகிறது!
பாம்பும் பல்லியும் உறவாடிக் கொண்டிருந்த
சிறைவாழ்வு சித்தரிக்கப்பட்டிருக்கிறது!
திரை உலகத்தில் ஓர் திருப்பத்தை ஏற்படுத்திய
அவரது திரை உலக வாழ்வைக் காண
நமக்கு களிப்பு பொங்குகிறது!
திருவாரூரிலிருந்து சென்னை வரை
நம்மை அழைத்து வந்த ரயில் பயணகாட்சி!

அடா. . . அடா. . . சொல்ல உவமை இல்லை!
இப்படி ஓர் படைப்பை இதுவரை யாரும் படைத்தது இல்லை!
இப்படியே எழுதினால் எவ்வளவோ எழுதலாம்!
சுருக்கமாக சொன்னால்,
மறைந்தவர்களுக்காக எழுப்பப்பட்ட
புகழ்பெற்ற நினைவாலயங்கள் என்றால்
வடநாட்டில்ஆக்ராவில் தாஜ்மஹால்!
தென்நாட்டில்சென்னையில் கலைஞர் நினைவாலயம் என்பேன்!
‘தாஜ்மஹாலை அமைத்தவர் மும்தாஜின் கணவன் ஷாஜகான்’
என்பது சரித்திரத்தில் இன்றும் நிலைத்திருக்கிறது!
அதேபோல்,
தந்தைக்கோர் அதிசய நினைவாலயத்தை எழுப்பியவர் மு.க.ஸ்டாலின்” என்பதும் என்றும் வரலாற்றில் நிலைபெற்றிருக்கும்!
அத்தனை பெருமையும் தளபதி உன்னைத் தான் சாரும்!
கலைஞர் உனக்கு தந்தை மட்டுமல்ல அரசியல் ஆசான்!
எந்தமகனும் இப்படி ஓர் அதிசய உலகை
அப்பாவிற்கு படைத்தது இல்லை!
தலைவர் கலைஞருக்கு மகனாக பிறந்ததற்கு
நீர் பெருமைப்பட வேண்டும்!
உன்னை மகனாக பெற்றதற்கு
கலைஞர் பெருமைப்பட வேண்டும்!

**துரைமுருகன்**
கழகப் பொதுச் செயலாளர்



இத்தனை மகிழ்ச்சிக்கு மத்தியில்
எனக்கு ஓர் ஏக்கம்!
பலநேரங்களில் நான் அழுதுவிட்டேன்.
அதற்குக் காரணம்
எனக்கு கலைஞர் மீதிருந்த பாசம்! நேசம்!
நான் கண்ணீர் சிந்தியதற்கு மற்றுமொரு காரணம்,
இந்த அற்புதத்தைக் காண
அம்மா தயாளு அவர்களுக்கு உடல்நிலை
இடம் தரவில்லையே என்பதுதான்!




புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் முழுவதும்

## மார்ச் 1 முதல்வர் பிறந்தநாள் நலத்திட்ட உதவிகள்!

### மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை!



புதுக்கோட்டை, மார்ச் 1-

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் முழுவதும் மார்ச் 1 கழகத் தலைவர், தமிழக முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள், மரம் நடுதல், ரத்த தானம் செய்தல் கழக கொடி ஏற்றுதல் என பொது மக்களுக்கு பயன்படும் வகையில் எழுச்சியாக கொண்டாடுவோம் என புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டு மக்களின் இதயங்களை தன்பால் தன் வயப்படுத்தி தமிழகத்தின் வளர்ச்சிக்கு ஓயாது உழைக்கும் ஒப்பற்ற தலைவருக்கு பிறந்தநாள் விழா. இளமைக்காலம் முதல் இரு வண்ணக் கொடி ஏந்தி, இயக்கம் காத்து தொண்டராய் உழைத்து உழைத்து மாபெரும் இயக்கத்தின் மகத்தான தலைவராக உயர்ந்திட்ட உத்தமருக்கு பிறந்த நாள் விழா, இந்தியாவில் உள்ள மாநில முதல்வர்களிலேயே சிறந்த முதல்வர் என பெயர் பெற்றிருந்தாலும், இந்தியாவின் சிறந்த மாநிலம் தமிழ்நாடு தான் என பெயர் பெறுவதுதான் நமக்கு பெருமை என சூளுரைத்து ஓயாமல் உழைத்து வரும் உன்னத தலைவர், உழைப்பால், தியாகத்தால், தொண்டால், அன்பால், நிர்வாகத் திறமையால், இமயம் என புகழ் பெற்றிருந்த போதும் நம்மை உருவாக்கிய தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரின் தடம் பற்றி தொண்டரோடு தொண்டராக களத்தில் நின்று இரு வண்ணக் கொடி ஏந்தி களமாடி வருகிற வரலாற்று தலைவனாம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஏழை எளியோர் பயன் பெறும் வகையில் நல உதவிகள் வழங்குதல், கண் தானம், ரத்த தானம் செய்தல் மார்ச் 1 அன்று பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்தல், நோயாளிகளுக்கு ரொட்டி பழங்கள் வழங்குதல் மாணவர்களுக்குத் தேவையான உபகரணங்கள் வழங்குதல் மரம் நடுதல், நீர்நிலைகளை செப்பனிடுதல், கழக கொடி ஏற்றுதல் மற்றும் கவியரங்கம் கருத்தரங்கம், வாழ்த்தரங்கம் நடத்துதல் என புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில் சிறப்பாகவும், எழுச்சி யாகவும் கொண்டாடிடுவோம். இதற்கான ஏற்பாடுகளை மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு , பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள் , துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், செயல்வீரர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் சிறப்பாக செய்திட வேண்டும்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.



கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், அம்பராம்பாளையம் பகுதியில் சுப்ரமணியம் என்பவரின் விவசாய நிலத்தில் தென்னை பயிரில் வேர் வாடல் நோயால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களை வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அருகில் வேளாண் உற்பத்தி ஆணையர் / வேளாண்மை – உழவர் நலத்துறை அரசு முதன்மைச் செயலாளர் செல்வி.அபூர்வா, நாடாளுமன்ற உறுப்பினர் கு.சண்முகசுந்தரம், தோட்டக்கலை மலை பயிர்கள் துறை இயக்குனர் குமரவேல் பாண்டியன், மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக துணை வேந்தர் திருமதி.கீதா லட்சுமி, தென்னை வளர்ச்சி வாரிய இயக்குநர் அறவாழி ஆகியோர் உள்ளனர்.